# திருமாலந்தாதி



ஆசிரியர்:
மகான் - வண்ணச்சரபம்
அருண்மிகு. தண்டபாணி சுவாமிகள்,
திருவாமாத்தூர்.

26—1—65.

திருவாமாத்தூர் கௌமாரசபை வெளியீடு எண் – 74.

உ

ஸ்ரீமந் நாராயணாய நம:



# திருமாலந்தாதி


ஆசிரியர்:

மகான் - வண்ணச்சரபம்

திருப்புகழ்ச்சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என வழங்கும்

**அருண்மிகு. *தண்டபாணி சுவாமிகள்***

***திருவாமாத்தூர்.***



வெளியிடுவோர்:

**இராதாபுரம் - பெரிய கம்பத்தம்**

**திருவாளர். அ. ஜானகிராம ரெட்டியார் அவர்கள்.**

**26—1—1965.**

உ
குருவே துணை.

# முன்னுரை.

வெண்பா.

*பெருமா லகற்றியின்பப் பேறனைத்தும் நல்கும்*
திருமாலந் தாதியெனச் செப்பும் – பெருமாண்பு
மன்னு துதிப்பா வழுத்துதண்ட பாணிமுனி
தன்னுபய பாதம் சரண்,

தேனிலுமினிய செந்தமிழ்ப் பிரபந்தவகை தொண்ணூற்றுறுள் அந்தாதி என்பதொன்று. ஒரு பாட்டின் அந்தம் (முடிவு) அடுத்த பாட்டின் முதற்சொல்லாக அமைவது, ஆதலால் அந்தாதி யென்ற காரணப்பெயர் பெற்றது. மேலும், முதற்பாட்டின் முதற்சொல்லை, இறுதிப்பாட்டின் இறுதிச் சொல்லாகவும் அமைப்பது ஒரு சிறப்பு. இப்படிப்பட்ட அந்தாதிகள் பல ஆன்றோர்களாற்பாடப்பெற்றவை உண்டு. அவை ஒரு ஊரைப்பற்றியும், கடவுளைப்பற்றியும் பெயர் பெற்றுள்ளன. அவை திருவேங்கடத் தந்தாதி, அபிராமியந்தாதி போல்வன. இந் நூல், திருமால் மீது பாடப்பெற்றிருப்பதால் "திருமாலந்தாதி" என்ற பெயரமைந்திருக்கிறது.

இந்நூல், இயற்றிய ஆசிரியரான. வண்ணச்சரபம் அருட் பெருந்திரு. தண்டபாணி சுவாமிகள், தமது அநுபவத்திற் கண்ட பல செய்திகளையும், பெருமாளின் அருட்செயல்களையும், சில வரலாறுகளையும் ஆங்காங்கு கூறுகின்றூர். அன்றியும், பரம்பொருள் ஒன்று. அன்பர்களின் பாவனைப்படி பல்வேறு வடிவங்களைக் கொண்டு அருள்புரியும், ஒரு வடிவைப்பற்றி வழிபட்டு உபாசிப் போன் முடிவில் எல்லாம் ஒன்றே யென்ற சமரச நிலையினையடைவர் என்ற வுண்மையைப் பல பாடல்களிற் கூறி விளக்குவர்.

" யாவர் எவ்வண்ணம் சொல்லும் எவற்றினும் இசைந்து
நின்றும், மூவலற்றெருளிரும் தொல்சீர் முதற்பரம்பொருள்"
(புலவர் புராணம்) என்றும்

" என் கடவுளே உயர்ச்சியென்று சொல்வோன் இறுமாந்து
நாட்கழியாதேங்கி வாடித். தன் கடவுள் திருவுருவைக்
காண வேண்டித் தவித்தானேற் சமரத் தோர்தம்மிற்
சேர்வான்" (தியாநுபூதி) என்றும்

கூறுவதாலறியலாம். எடுத்துக்கொண்ட கடவுளின் இயல்புக் கேற்ப, அதற்கேற்ற வரலாறுகளையும், பரத்துவங்களையும் கூறுவது

மரபு. அதனுல் கடவுள் நிச்சயமில்லாமல் பாடுவதாகக் கொள்வது கூடாது. சொல்லப்போகும் பகுதி (அதிகார வகை) கட்கேற்பச் சிறப்புக் கூறுவதுபோலென்க. அம்முறையில் திருமாலைக் குறித்த இந்நூலில், சில பாடலில் சிவனைப்பற்றிக் கூறும்போது வழங்கும் வரலாற்றுமுறைபற்றிய பகுதியைக் காணலாம். ஆகவே சிவனை யிழித்துக் கூறுவதாகக் கருதுவது முறையன்று. சிவ புராணம், விஷ்ணுபுராணம், அக்கினிப்புராணம் போன்ற பதினெட்டுப்புராணங் கூறிய ஆதிமுதல்வர் வியாச முனிவரேயாம். ஒவ்வொன்றுக்கும் தலைமை (பரத்துவம்) அமைத்து, மற்றைய கடவுளை அதன் அங்க மாகக் கூறுவதுகொண்டு அவற்றை வெறுப்பதில்லை.

எல்லாச் சமயங்களும், அன்பர்கள் மனநிலைக் கேற்பக் கைக் கொண்டு பயன்பெற அமைக்கப்பட்டவைகளேயாம். நகை, துணி, இவற்றை விற்கும் கடைகளில் பலவேறுவிதம் உள்ளன. ஒவ் வொன்றும் ஒவ்வொருவருக்குப் பிடிக்கும். அவர்களை ஒரேவிதமாக ஏன் விற்கக்கூடாதுஎன விவாதிப்பதில்லை. பசுவின்நிறம் பல. பாலின் நிறம் வெள்ளைதானே. பணிகள் பல, பொன் ஒன்றுதானே. இது போல, கடவுட்பெயர் பல, அதில் விரவியுள்ள பொருள் ஒன்றே யென்ற சமரச வுணர்வு பெறவேண்டும் அப்போதுதான் ஞானம் ஏற்படும். பிற சமயபேதம் வராது; பிறசமயத்தினர்மீது பகையும் வராது.

பின்கடவுள் வேற்றுமை தோன்ருது, சொன்னுல்
பிணங்கிடான், அவரோடும் பேசிக் கொள்வான்
முன்கடவுள் வரக்கண்டும் புவியோர் உய்யும்
முறைகருதிப் பலவாறு மொழிவார் உண்டே''
(தியாஞநுபூதி) என இவர்செய்தநூலில்

என வருவது காண்க. மேலும் சமயவாதிகள் ஒன்றை உயர்த்தி, மற்ருென்றைத் தாழ்த்தியும் பேசுவதால் சமரசஞானிகளால் இகழப் பெறுவர். அது அநுபூதி பெற்றவர்கட்குப் பெருமை என்றும் கூறுவர் வேறு ஒரு நூலில்.

''அறுவகைச் சமயந்தோறும் பரத்துவஞ்சொற்(று) அவரெலாம் இகழ்தருபெருமை, பெறுமவர் வியாசன் சங்கரமுனிவன் தத்துவ ராயனேர் பெரியோர்'' என்பதாலுமறிக. திருமால் சிவனுக்குப் புறம் பானவரல்ல, சங்கரநாராயணர் வடிவம். இரண்டும் ஒன்றென்பதை உணர்த்தும். தில்லை, நெல்லை, அருணை, செந்தில்போன்ற தலங்கள் பலவற்றில் சிவன்கோவிலுள் திருமால் வடிவத்தை அணிமையி லேயே அமைத்துள்ளனர் ஆன்ருேர். மேலும் பல காரணமுண்டு. விரிக்கிற்பெருகும். இதிற் கூறுவதும் மிகை.

இந் நூலாசிரியர் வரலாறு பல நூல்களில் வந்துள்ளது. இவர் திருநெல்வேலியிற்றேன்றி இளமையிலேயே, முருகன் ஆறெழுத்து உபதேசம் பெற்று, செபம், தியானம், வேலாயுதவழிபாடு செய்தனர் எட்டாம் வயதிலேயே புதுப்பாடலியற்றி – பல்லாயிரம் நூல்களியற்றினர். துறவுநிலையிலிருந்து திருவாமாத்தூர்ச் சிவதலத்தில் சமாதி கொண்டனர். முழுநீறுபூசி இருதோள்களிலும் இரண்டு கலைத் திருநாமம், துளசி, உருத்திராக்கமாலைகளைக் கலந்து அணிந்திருந்தனர். திருவரங்கத்திருவாயிரம். திருவரங்கத்து இதழகலந்தாதி திருவனந்தசயனத்துயமக அந்தாதி போன்ற பலநூல், திருமால் மீது இயற்றினர். அரியேகபாதத்தந்தாதி உரையுடன் செய்தனர்.

திருமால் வழிபாட்டுக்கு, புதன்கிழமையே சிறந்ததென்பது இவரது கருத்து. ஆதியில் இம்முறையேயிருந்தது. பிற்காலத்தில் எதோ காரணம்பற்றி, சனிக்கிழமை பாராட்டப்பெற்றது சனி, பல விதத்திலும் சிறப்புடையகோளல்ல. சகல செல்வத்துக்கும் உரிய திருமகள் கணவனுன புருடோத்தமன் வழிபாட்டினைப் புதன்கிழமையிற் செய்வது சிறப்பென்று கூறுகின்றூர். இப்படிப்பட்ட சிறப்புள்ள ஆசிரியர் அருளிய இந்த நூலைப் பதித்து வெளியிட முன்வந்த அன்பர், இராதாபுரம் பெரியகம்பத்தம் *திரு. அப்பாஜி ரெட்டியார்* அவர்கள் புதல்வர் *திரு.* **சாளகிராம ரெட்டியாராவர்.** இயல்பாகவே தந்தையார்போல, எவரிடத்தும் இனிமையாய்ப் பழகுவதும், உரிமை பாராட்டுவதும் உடையவர். திருநாமம் தவருது அணியும் சமயப்பற்றுடையவர் இந்த தண்டபாணி சுவாமிகள் ஆலயத்தில் ஆண்டுதோறும் சித்திரைமாதத்துப் பௌர்ணமியில் முன்னேர் ஏற்படுத்தியதை முறைதவருது வழிபாடுசெய்துவருபவர். அவர் இதை ஆவலுடன் பதித்து – மயிலம் படிவிழாவன்று வெளியிடுகின்றூர்.

தமது பொருள்கொண்டு பதித்து வெளியிடும் அன்பர் அவர்கட்கும், அவரது மனைவி, மக்கள் சுற்றத்தினர்கட்கும், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்துகற்கும் பெரியோர்கட்கும் எல்லாம்வல்ல இறைவன் திருவருள் உண்டாகவும், பல்லாண்டுகள் நலமுடன் வாழவும் போற்றி வாழ்த்துகின்றேன்.

கௌமாரமடாலயம்,
திருவாமாத்தூர்.
விழுப்புரம் P.O. 26–1–65.

இன்னணம்,
***தி. செ. முருகதாச ஐயா,***
(நூலாசிரியர் பெயரர்)

# பதிப்புப்பாயிரம்.

எண்சீர்விருத்தம்

சீர்மருவு திருநெல்லைப் பதியினிடை முருகன்
திருவருளாற் றோன்றியிளம் பருவமுதற் செவ்வேள்
கூர்மருவு வேற்பூசை ஆறெழுத்துச் செபமும்
கொண்டுவய(து) எட்டரையிற் குலவுபுதுப் பாடல்
ஊர்மருவு வார்பலரும் வியப்பநுவல் திறலோன்
உரைக்கரிய சந்தவண்ணம் இலக்கணமும் சொல்லிப்
பேர்மருவு புலவர்புரா ணத்தொடுகௌ மாரம்
பேணுதண்ட பாணிதவப் பெரியவன்சீர் பெரிதே

திருமலிரா தாபுரத்தில் அப்பாசி யென்னச்
செப்புபெயர்ச் சீரியன்றன் புத்திரனு மென்ன
வருபுனிதன் சானகிரா மத்திருப்பே ருடையான்
மனத்தெளிவோன் எவரிடத்தும் வாஞ்சைகொளு மினியன்
பெருமைமலி தண்டபா ணிப்பெரியோன் முன்பு
பேசுமிந்தத் திருமாலந் தாதியினைப் பதித்துப்
பெருகுமன்பால் மயிலத்துப் படிவிழா நாளிற்
பிறங்கவெளி யிட்டனன்சீர் பெற்றுவா ழியவே.

கௌமார மடாலயம்
திருவாமாத்தூர்.
விழுப்புரம் P.O 26-1-65

இன்னணம்.
**தி. மு. சங்கரலிங்கம்,**
தமிழாசிரியர்.



மகான் - வண்ணச்சரபம்
திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள்
என வழங்கும்

அருட்பெருந்திரு. **தண்டபாணி சுவாமிகள்**

தோற்றம்
விகாரி–கார்த்திகை கச-ம் நாள்
28–11–1839

திருவருட் கலப்பு
விளம்பி–ஆனி உரு-ம் நாள்
5–7–1898

உ

ஸ்ரீமந் நாராயணாய நம:



# திருமாலந்தாதி.

காப்பு - வெண்பா

பெருமால்கொண் டாயர்மனைப் பெய்வளையார் வேண்டும்
திருமாலுக்(கு) அந்தாதி செப்பக் - கருமாலை
யாயநிறத் தானைக் கருள்புரிந்த ஆழியொடு
தூயசங்கும் நல்கும் துணை.

## நூல்

கட்டளைக் கலித்துறை.

1

திருமகள் கேள்வனைச் செஞ்சுட ராழி செலுத்துதிண்டோட்
கருமலை போலும் கருணா கரனைக் கவுத்துவப்பூண்
மருமனை ஒப்பில் கலையோர் இரண்டும் வழுத்துதொன்மைத்
தரும விநோதனைப் பாடஎன் நாவும் தவம்செய்ததே.

2

செய்யதண் டாமரைப் பூமீ திருந்த திருமடந்தை
உய்யநின் மார்பில் இடங்கொடுத் தாய்!உன்னை உன்னிநின்றும்
வையகம் ஏச மெலிந்தேன்கண் டாய்!என்முன் வந்தருளாய்!
பையர வாய அணைமேற் றுயிலும் பசுங்கொண்டலே

3

கொண்டலை வென்ற திருமேனிச் சீரும் குறுஞ்சிரிப்பும்
விண்டலத் தார்தஞ்ச மாயதிண் டோள்களும் மென்பதமும்
கண்டலை வற்று நிலையாக நிற்கும் கருத்தினர்தம்
தொண்டடி யேற்கும் அருள்வாய்கொல் லோ?மது சூதனனே

4

சூதன்ன கொங்கை மடவார் மயலிற் சுழல்கவென்று
வேதனந் நாளில் விதித்திருந் தாலும்நின் மெய்யடியார்
பாதமென் சென்னியிற் றோய்ந்தாற் றவிரும் பரிசுணர்ந்தேன்
பூதலம் உண்டுமிழ்ந் தாய்!மலர் போல்உந்தி பூத்தவனே.

5

பூத்தாங்கும் நின்மைந்தர் கைத்தொழி லாலுளம் புண்படுவேன்
காத்தாளுந் தண்கரு ணைக்கடல் வாழ்த்திக் கசிந்துருகி
மாத்தாழை பூக மலியும் குருகை வளநகர்க்கோன்
சேத்தாள் வணங்கித் தெளிவதென் றோநெடும் சீதரனே

6

சீதக் கடலிற் றுயின்றாய்! அரக்கர் சிதையவென்றாய்!
பாதக் கமல மலரால் விசும்பொடு பாரளந்தாய்!
வேதக் கடவுளைத் தந்தாய்! எனது வினைதவிர்க்கும்
நீதக் கருணை யுனக்கில்லை யோமிக நீண்டவனே.

7

நீண்டநின் மேனியைச் சிந்தைசெய் யாது நெடிதுயிர்த்து
மாண்டழி யாத வரந்தரு வாய்!சொந்த மைத்துனராம்
பாண்டவர்க் காகக் கொடியோர் அவையிலும் பாதம்வைத்து
வேண்டலைக் கேட்கவும் வாய்திறந் தாய்!எங்கும் மேயவனே.

8

மேய்த்தகன் றேடுற்ற தானவன் தன்னை விரைந்தெடுத்துக்
காய்த்த விளவில் எறிந்தாடல் செய்து கனமருதைச்
சாய்த்த பிரான்திருத் தாளே கதிஎனச் சாருநலம்
வாய்த்தபின் தீவினை உண்டோ? எமக்கிந்த மாநிலத்தே.

9

நிலம்நீர் அழல்வளி வானென்ற பூதங்கள் நீடவைத்து
மலராய உந்தியில் வந்தோனைக் கொண்டு மறைவிதித்துக்
குலமாது பங்கன் முதலோர்க்கும் நன்மை கொடுக்குமெங்கோன்
புலவோர்பின் செல்பவன் என்றோர்ந்து போற்றுநர் புண்ணியரே.

10

புண்ணியஞ் செய்பவர் மேலருள் மாரி பொழியுமலர்க்
கண்ணினன் சங்குட ஞாழியுந் தாங்கிய கைப்பெருமான்,
தண்ணிழற் பூம்புளி நீழலுற் றேன்றனைத் தன்வடிவென்(று)
எண்ணிடும் தொண்டர்க் கிரங்கா திரான்என்ப(து) என்கருத்தே

11

கருத்தே புகுந்தொரு காரணம் காட்டிக் கனியவைக்கும்
திருத்தேவ தேவன் எவனோஎன் றாய்ந்து திகைத்துநிற்பீர்!
குருத்தேடி வாடினும் எய்தரும் பேற்றைக் கொலைக்களத்தில்
உருத்தேர் விசையனுக் கீந்தபி ரான்என்ன உன்னுமினே.

12

உன்னி உருகும் ஒருசேய்முன் தூணில் உதித்ததுவும்
மின்னிகர் சிற்றிடைப் பாஞ்சாலி சோகம் விலக்கியதும்
பன்னி மகிழுந் தமியேற்(கு) இரங்கப் படாதுகொல்லோ?
பொன்னிசை யுந்திருத் தோள்மேற் றுளவம் புனைந்தவனே.

13

புனையிழை யார்மயற் பேயாற் புலர்ந்து புலம்புறும்என்
வினைவலி தீர்த்துன் அடியார்தங் கூட்டத்தில் மேவவைப்பாய்!
பனைபொரு கையுடைக் குஞ்சரக் கோடு பறித்தெறிந்து
நனைமலர்த் தோட்கஞ்சன் ஆவிகொன் றாயுன்னை நம்பினனே.

14

நம்பாத நெஞ்சம் உடையேன்என் றன்னை நழுவவிட்டுக்
கொம்பாம் முலைச்சியர்க்(கு) ஆளாகும் தீயரிற் கூட்டிவிடேல்
அம்பார்ந்த கைம்மன்னர் பற்பலர் கேட்டுள் அகங்கொதிக்க
வம்பா யிரம்சொன்ன பொல்லாற்கும் வீடருள் வானவனே.

15

வானவர் தம்மைக் குரங்காக்கி மானிட மாகிவந்து
கானகத் தூடு மனையோடு சென்று கடல்கடந்து
தானவர் கோன்தலை பத்தறுத் தாய்உனைத் தஞ்சமென்னும்
நானலி யாவண்ணம் இந்நாளொர் ஆடல் நடாத்துவையே

16

நடமாடிக் காளியன் றன்னைவென் றுய்பகல் நள்ளிருளாய்
இடரா மவன்படப் பார்த்தறுய்ந (து)ஆனந்தம் எய்தச்செய்தாய்!
குடர்தோல் எலும்பு தசையுண்டு வாழும் குணுங்கரெல்லாம்
கெடவோ ருக்கொண்டு வாராய்மெய்த் தொண்டற்சொற் கேட்பவனே

17

கேட்பஎல் லாந்தந்துன் அன்பரிற் கூட்டிக் கிளிமொழியார்க்(கு)
ஆட்படும் புன்மை தவிர்ப்பதென் றேசுடர் ஆழிஒன்றும்
வாட்படை ஒன்றும், வளைஒன்றும், தண்டொன்றும் வல்லவுணர்
தூட்பட வெற்றி சாந்தூற்றும் வில்லொன்றும், தொட்டவனே.

18

தொட்டால் முழுகத் தகும்தொடக் காளர்தம் தோள்வலியும்
எட்டாம் எழுத்துரை போர்மனச் சோகமும் ஈர்ந்(து)எனக்கும்
நட்டார்க்கும் ஆனந்தம் நல்குவை யோதுட்ட நாகரஞ்சக்
கொட்டாண்மை செஞ்சிறைப் புள்ளர(சு)ஊரும் குணக்குன்றமே.

19

குணமே விளக்கும்நின் எட்டெழுத்தோதுங் குறிப்பினர்தாள்
மணநாறும் சென்னிபெற் றேன்உனக் காம்தமிழ் வண்மைபெற்றேன்
பிணமாட போர்புரி வார்தொழும் பேறும் பெறப்புரிவாய்!
பணவாள் அரவனை மேற்றுயில் கூரும் பழம்பொருளே!

20

பொருளாவல் கொண்டு பரதவிப் பேனும்நின் பொன்னடியார்
அருளாண்மை முற்றி அளிகூர்வ னோ?எண்ணில் ஆரணமும்
தெருளா விநோத முடையாய்!விண் ணோர்தொழும் சேவடியாய்!
மருளார் காணறி யாய்!அறி வானின்ற மாதவனே.

21

மாதர்தம் பூண்முலைக் காசைகொண் டுன்னை மறந்துழல்வேன்
ஆதர வாள ரொடுசேரப் பார்க்கில் அறமுனக்கே
காதள வோடிய கண்ணார் பலரும் கருதுதிண்டோட்
சீதர னே!நெடு மாலேசங் கேந்திய செங்கையனே

22

செங்கையில் ஆழியும் சங்கமும் தோன்றத் திருவுடன்,பார்
மங்கையையும் பாங்குறச் செஞ்சிறைப் புள்ளில் வருவதென்றோ?
தங்கைதன் சேயென்று நாடாத கஞ்சனைத் தாக்கி,அப்பால்
நங்கைபங் காளன் முதலோரை வென்றிட்ட நாரணனே.

23

நாரண னேஉல கெல்லாம் புரப்பவன், நான்முகத்தால்
ஆரணம் சொன்ன பிரமாவைத் தந்தவன், ஐம்முகத்தோள்
காரண னேஎனக் கைகூப்பக் கண்டு கருணைசெய்தோன்,
வாரணம் காத்த பெருமாள்என் பார்க்கில்லை வல்வினையே

24

வல்வினைப் பேயும், மடவார் கொடுக்கும் மயற்பிணியும்,
பல்விதத் துன்பமும், தீரஎன் றுல்எம் பராங்குசனைச்
செல்வியைப் போற்றி அவரரு ளாலுளம் தேறியப்பால்
வில்விசை யன்றிருத் தேரூர்ந்த கள்வனை வேண்டுமினே.

25

வேண்டும் வடிவம் எடுத்துநின்றுளும் விறற்றிருமால்
பாண்டுமன் மைந்தன் ஒருவன்றன் றேரிற் பரிநடக்கத்
தூண்டும் விநோதம் உணர்ந்தேத்த வல்லமெய்த் தொண்டர்மட்டில்
ஈண்டுவை குந்தம் வருமெனத் தேர்ந்தும் இளைத்தனனே.

26

இளைக்கும் தளர்நடை யோனுகிக், கோல்கொண் டிருமி,விக்கி,
வளைக்கும் சிலைநிகர் கூன்முற்றி, மாளுமுன் வந்தருளாய்
முளைக்கும் பனிமதி நேர்நுத லார்தம் முலைத்தொகுதி
திளைக்கும் புயத்தர சே!பரி மாமுகத் தேசிகனே.

27

தேசிக ராவரு வார்விதித் தாங்கு திருவுருக்கொண்(டு)
ஆசில்மெய்ப் பேறருள் வான்,கொடி யோரை அழிக்கும்பிரான்,
ஏசினர் தாமும் பெறவீடு நல்கும் இறைவன்அன்று
கோசிகன் பின்சென்று கல்லைப்பெண் ணுக்கிய கோமகனே.

28

கோமளக் கொங்கை மடவார் இருவர்தம் கொண்கனென்றும்,
காமனைப் பூமனைத் தந்தபி ரான்என்றும், காரணைய
மாமணி வண்ணத் திருமேனி யானென்றும், வாழ்த்துதலால்
ஏமனும் கைதொழும் பேறுபெற் றார்க்கில்லை ஏழ்பிறப்பே

29

பிறப்பேழும் தீர்ந்தநின் தொண்டர்தம் சீரைப் பெரிதுரைத்து
மறப்பேத•மின்றி யறிவா விளங்கி மகிழ்வதென்றோ?
சிறப்பேழ் விளைக்கும்மின் னுள்கண வா!மதர்ச் செவ்வரிக்கட்
குறப்பேதை மாரஞ்சக் குன்றெடுத் தாடிய கொற்றவனே.

30

கொற்றவில் வீரர் குழுவார் களத்தொரு கோளரிபோற்
சுற்றவல் லார்க்குமுன் தூதுசென் றன்பதம் சூடும்நலம்
பெற்றவர் தம்மைத் துதியா திகழும் பிணக்கரஞ்சச்
செற்றளி கூர்திறத் தோர்வரும் நாளைத் தெரிந்திலனே.

31

தெரிந்தடி யார்செய்த குற்றமும் தீர்க்கும் திருநெடுமால்
விரிந்த அராவணை மேற்றுயில் வாரென மேவுமெங்கோன்
சரிந்தபைங் கூந்தல் மடவார் விரும்பும் தடம்புயத்தான்
புரிந்தவி னோதங்க ளெல்லாம்சொல் வாரில்லை பூதலத்தே.

32

பூதங்கள் சூழப் புறங்காட்டி லாடும் புராரியன்று
பாதங்கள் மேல்விழ வெண்டலை யோடு பறித்தெறிந்து
மாதங்க வெற்பிற் குடியேற்று மாயவன் வந்துநெஞ்சின்
ஏதங் களைந்(து)என்னை அன்பரிற் கூட்டுவ(து) எத்தினமே.

33

எத்திக்கி லுள்ளவர்க் கும்புன லோ(டு)அன்னம் ஈயும்பிரான்
தித்திக்கும் ஆரமு (து)உம்பருக் கூட்டிய செங்கையண்ணல்
பத்திக் கிரங்கும் பெருமாள்விண் ணோடு படியளந்த
முத்திக் கழல்பெற வேயென்றன் ஆவி முயல்கின்றதே.

34

முயலற்ற மாமதி யன்னவெண் சங்கம் முழங்கும்பிரான்
கயலொத்த கண்ணியர், நாணமுற் றேங்கக் கலைகவர்ந்தோன்
புயல்வெட்கு மேனித் திருமால் உலகிற் புரிந்துவக்கும்
செயலைக் கருதித் திரிவார்விண் ணோரினும் சீரியரே.

35

சீரிய நாமம் புனையார் எழுத்தெட்டும் சிந்தைசெய்யார்,
காரிய காரணந் தேரார், குருகைக் கவிஞனென்னார்,
ஆரிய மும்தமி ழுஞ்சம மாமென் றறிந்தமையார்,
வீரியம் பேச மெலிந்தேன் மராஎய்த வித்தகனே.

36

வித்தகர் காண விளையாடும் மாயனை, வேலையிற்போய்ப்
புத்தகக் கள்வரைக் கண்டுபல் வாறு பொருதுவென்ற
சித்தனைச், சந்ததம் தெண்டனிட் டேத்தும் தெளிவுடையார்
பித்தன்என் றேசிடும் பேறுபெற் றோர்க்கும் பிறப்பில்லையே.

37

இல்லைஎன் றேற்பவர் மேல்விழும் தீயர் இலந்தொறும்போய்ப்
பல்லையெல் லாமவர் கண்காணக் காட்டிப் பரதவியா(து)
ஒல்லைவந் தாளப் பெறுவேன் கொலோஉ ரத்(து) ஒள்ளியபூங்
குல்லையொப் பாளைவைத் தாய்!கடல் மேற்றுயில் கூர்ந்தவனே.

38

கூர்ந்தறி தன்மைப் பதின்மரைப் போற்றும் குணத்தினரைச்
சேர்ந்தடி யேனுய்யச் செய்தருள் வாய்நெடுந் தேர்விசையன்
நேர்ந்தவண் ணஞ்சொன்ன 'வாறே முடித்தவன் நெஞ்சகத்தும்
ஆர்ந்தழி யாத புகழீந்து காத்த அருட்கடலே

39

கடலும் சினைமுகி லுந்திரு மேனிக் கவின்விரும்ப
மடலவிழ் தண்டுளிப் பேரா விலையில் வலப்பதம்தொட்(டு)
இடமலி பாருண்ட வாயில்வைத் தோங்கும் இறைவனைக்கண்(டு)
உடலுடன் உள்ளம் உருகநிற் பார்க்கில்லை ஊழ்வினையே

40

ஊழைத் தவிர்த்துன்னை உன்னிநின் றேங்குநெஞ் சுள்ளியவா(று)
ஏழைக் கருளவும் வல்லாய்என் றேத்தும் எனையுலகிற்
பாழைக் குறிக்கும் அவர்தாமும் ஏசிடப் பார்த்திலையோ
கோழைப் பொதுவரு மன்னரும் போற்றும் குலக்கொழுந்தே.

41

குலமும் குறிகளும் செய்கையும் தீர்ந்தமெய்க் கொள்கையென்னும்
நலமிஞ்சு சீர்கொண்ட மேலோர் உளத்தில் நடம்புரியும்;
கலகச் சமையத் துளாருண ராது கரந்துநிற்கும்;
வலனென்று சக்கரத் தண்ணல்பொற் றுள்களின் வண்மையிதே.

42

வண்மைச் சதுமறை வாரியிற் போமன்று வல்லவுணர்
திண்மைப் புயவலி தீரவென் றீந்தவன் சேவடியில்
உண்மைப் பிரியம் உதியாச் சிதடர் உணர்ச்சியெல்லாம்
வெண்மைப் படுவதென் றோர்ந்திருப் பார்நல்ல விற்பனரே.

43

விற்படு வானுல காள்வானும் தேவரும் வேண்டடிற்காப்
பற்பல மேனி எடுத்தாடு(ம்) மாயனைப், பாவமன்னர்
மற்படை ஏமன் வசமாகக் கண்டு வளைமுழக்கி
நிற்பவன் தன்னை, நினையாத நெஞ்சரை நீங்கல்நன்றே.

44

நீங்கரி தாகி நிறைந்தானைப், பார்த்தன் நினைப்பறியும்
பாங்கனைப் பன்னிரு நாமமும் சாத்துமெய்ப் பாகவதர்க்(கு)
ஈங்கருட் பேறளித் தப்பால்வை குந்தமும் ஈபவனைப்,
பூங்கணைச் சித்தசன் தாதையைப், போற்றிடிற் பொய்யறுமே.

45

பொய்யினும் மெய்யினும் நின்றானை, நீலப் பொருப்பனைய
மெய்யினை யாது சமராடும் வீரனை, வெள்அரவப்
பையிடை யோகத் துயில்கூரும் அண்ணலைப், பாடறியா
மையிருள் அன்ன மனத்தார்க்[கு]எய் தா[து]ஒப்பில் வைகுந்தமே.

46

வைகுந்த மேயுண்மை வீடெனத் தேறிட வல்லவர்க்குப்
பொய்குன்றும், மெய்மலி வாம்,தனி வீரம் பொருந்தும்,அப்பாற்
செய்குன்ற மன்ன களிற்றுளர் அஞ்சும் திறமையுண்டாம்,
பெய்குங் குமக்கொங்கை மாஞர் விளேக்கும் பிணக்கறுமே.

47

பிணமாம் உடம்பிணேத் தானெனக் கூறும் பிழையுடையார்
கணமார்வங் கொள்வது கண்டுதிண் டாடிக் கலகுங்மென்னேப்
பணமாட ஆடும் அரன்போல வாழப் பணித்தருளாய்!
மணமாம் மலர்ப்பொகுட் டுள்ளாள் கருத்துணர் மாயவனே.

48

மாயமெல் லாம்வல்ல பெம்மான், பொதுவர் மகளிர்க்கெல்லாம்
நாயக ஞகிஅு சோதைதன் பாலொரு நற்குருந்தாய்
மேய பிரானன்றி மற்ருேர் கடவுள் விளம்பிடினும்
ஆயவன் ருஅவண் உற்ருன்என்(று) ஓர்வ தரிதரிதே

49

***அரியோம், நம***வெனப் பைந்துள வாதி அருச்சித்துன்னேச்
சரியோங்கு கைத்திரு மர்ஞளொ டுன்னித் தமிழுணர்ந்த
பெரியோர் மகிழத் துதிகூறி நிற்கும்மெய்ப் பேறருள்வாய்!
விரியோத வாரியின் மேல்நெடும் தேர்விட்ட விண்ணவனே.

50

விண்ணவர் போற்றும்நின் ஆடல்பல் கோடியுள் மேதினியிற்
கண்ணன்என் ருேர்திருப் பேர்கொண்டு தோன்றிய காரணமொன்(று)
உண்ணமு தென்னஎன் காதினுக் கானந்தம் உய்ப்பதென்ளே?
தண்ணருள் மாரி பொழிமேக மன்ன தனித்தெய்வமே.

51

தனித்தறி வாநின்ற நீளண்ணி லாத சமையம்வைத்து
மனித்தரிற் றீயவர் ஏசிடக் கேட்டு மகிழ்வதென்ளே?
தொனித்தசங் கேந்திய மாலே யொருபது தொண்டர்நெஞ்சுக்(கு)
இனித்தமு தாய பரனேயெல் லோர்க்கும் இறையவனே.

52

இறையள(வு) அன்புநின் பாற்செலுத் தாதுழல் ஈனநெஞ்சேன்
மறையவன் போலும் மகவாக நாட வரந்தந்தநீ
குறையறும் ஆனந்த வாழ்வளித் தாளக் குறிப்பதென்ருே?
பிறையணி வான்முதற் றேவரெல் லாம்ஆகப் பெற்றவனே

53

பெற்றபெய்ப் பேறுடை யார்தம்மை நாடி பெரிதயர்ந்து
மற்றவர் ஏச மெலிவேன் கன்வில்முன் வந்தொருசொற்
சொற்றது மெய்யெனில் ஆள்வாயென்[று] எண்ணியும் சோர்வொழி
பொற்றடந் தாமரை மேலிருந் தாள்புணர் புங்கவனே. (யேன்

54

புங்கவ ரஞ்சும் புயவலித் தானவர் பொன்றவென்று
சங்கம் முழக்கிக் களிகூரும் மாயவன் தாள்பரவும்
எங்களுக் கின்னல் புரிவாரும் அன்னவர்க் கேற்றவரும்
செங்கனற் பூளை எனநாச மாவது சீக்கிரமே

55

சீக்குழி யன்ன கடிதடத் தார்மயற் சேற்றைவிட்டுத்
தேக்குநின் ஆனந்த வாரியின் மூழ்கித் திருவருளை
நாக்குள ருது வழுத்துமெய்ப் பேறென்று நல்குவையோ?
காக்குந் தொழிலுடை யாய்மூல மாநின்ற காரணனே.

56

காராரு மேனியும் தாமரைக் காடெனக் காட்சிதரும்
ஏரார் அவயவக் கூட்டமும் சிந்தை இடத்திருக்க
ஆரா தனம்செய்யும் அன்பரைச் சேர்வதென் ஆசைகண்டாய்
கூராரும் ஆழியும் சங்கமும் செங்கையிற் கொண்டவனே

57

கொண்டாடித் தொண்டு புரிந்தோர்க்கும் தீமொழி கூறினர்க்கும்
பண்டாய ஞானப் பதங்கொத் தாயெனப் பாகவதர்
விண்டார் வினவி உனைப்போற்றி நின்றனன் விட்டுவிடேல்
அண்டார் குடிகொரு தீயா விளங்கும் அரும்பொருளே.

58

அரும்பாவி என்றெனைத் தள்ளி விடாமல் அடியரிற் சேர்த்(து)
இரும்பாய நெஞ்சுரு குந்திறற் காட்டுவ(து) என்றுகொல்லோ
கரும்பாங்கை வில்லியைப் பெற்றபொற் பாவை கலந்திருக்கப்
பெரும்பாற் கடற்றுயின் ருயுந்தி பூத்த பெரியவனே.

59

பெரியார் உணரும் பெருமானை, நான்மறை பேசுவதற்(கு)
அரியானை, ஆலிலை யிற்பெரும் பாம்பில் அறிந்துயில்கூர்
கரியானைக், கண்டுகொண் டேனென்று நான்சொலும் காலமுண்டோ?
தெரியாத குற்றமெல் லாம்பொறுத் தாளும் திருவுள்ளமே.

60

திருவும் புவிமக ளும்புணர் வானைச் சினைமுகில்நேர்
உருவும் அருவும் உடையானை எந்நெறி ஓதுநர்க்கும்
குருவும் கடவுளும் ஆனுன்என் ரேர்ந்தமெய்க் கொள்கைவல்லோர்
மருவும் சுகமற் றுளோர்க்கெய்தி டாதென்னும் வார்புவியே.

61

வாராருங் கொங்கை மடவார் வதன மலரிடத்துக்
கூராரும் வேலன்ன கண்வந்து பாயக் குலையுமென்னைச்
சீராருங் நின்னடி யார்பெருங் கூட்டத்திற் சேர்ப்பதென்றோ?
நீராரும் முண்டகத் தாள்முகுந் தா!தொல்லை நித்தியனே.

62

நித்திய மூர்த்தி நெடுமால்என் றேதும் நெறியுடையார்
நத்திய வாறு புரிவாய்என் றேதொல்லை நான்மறையும்
சத்திய மாகத் தினங்கூறக் கேட்டுநின் தாள்பணியேன்
துத்தி அராவணைப் பள்ளிகொண் டாய்உம்பர் சொந்தத்தனே.

63

சொந்தக் கடவுள் எனப்பலர் போற்றித் தொழும்புசெய்ய
அந்தக் கருத்தினந் தேறள வாகி அமையுமுன்னைக்
கந்தக் கமல மலரா ளுடன்கண்டு கைதொழும்பே(று)
இந்தக் கடையனுக்(கு) ஈவாய்!சங் காழி எடுத்தவனே

64

எடுக்கும்கை வேழ மருப்பொசித் தாய்!கஞ்சன் ஈடழித்தாய்
கொடுக்கின்ற வனைத்த டுத்தோன்றன் கண்ணைக் குருடுசெய்தாய்
மடுக்கும் கொடுவிடப் பாலொடும் பேயுயிர் வாங்கிவென்றாய்
திடுக்கென் றெழுந்துவந் தென்பிறப்(பு) ஏழையும் தீர்த்தருளே.

65

தீரா வினைதடுத் தானந்த வாரியும் சித்திஎட்டும்
போராடும் வீரர் புறங்காணும் வெற்றியும் போதநல்கிப்
பேராத வைகுந்த வீடளித் தாளும் பெரியபிரான்
வாராத தாற்படும் பாடெடுத் தோதும் வலியில்லையே.

66

வலியோங்கு மாருதி கைத்தா மரையில் வயங்குநின்றாள்
கலியாரும் என்றலை மேலொருக் காலுறக் காட்சிதந்தாள்
புலியோடு பெற்றமும் சென்றோர் துறையிற் புனலருந்தும்
நலியா நெறியுடை யார்பலர் போற்றிய நாரணனே.

67

நாரியர் கூர்விழிப் பார்வையி னுலுள்ளம் நையுமென்னைச்
சீரிய தொண்ட ரொடுக்கூட்டி யாண்டுன் திருப்பணிக்காம்
கூரிய புந்தியும் நல்கிமுன் னின்று குறியுணர்த்தாய்
வேரியந் தாமரைப் பூத்துணைப்போலும் விழியண்ணலே.

68

விழியாரக் கண்டுன் திருத்தாள் சுமப்பது வேண்டுமென்னை
வழிபாடு செய்யப் பணித்தாய்; துதிக்கும்நல் வாக்களித்தாய்
ஒழியாப் புகழும் விளையாட்டும் ஈந்தருள்! ஒன்னலர்ஊர்
அழிவாகத் தீயிட்ட தூதோடன்(று) அன்னம் அயின்றவனே.

69

அயில்போலுங் கண்ணியர் தம்மனை தோறும் அமர்ந்திருந்தாய்
வெயில்வீசும் ஆழியொன் றாலிருள் காட்டினை வேந்தர்முன்னம்
குயில்போற் கதறிய பேதைக்கு மானங் கொடுத்தனை!யான்
பயில்வாச கத்துக்(கு) இரங்காய்! விதியைப் பயந்தவனே

70

பயவாரிப் பள்ளிகொண் டுள்ளானை அன்பர்தம் பக்கல்நின்று
முயல்வானைத் தண்ணரு ளாலுயிர்க் கூட்டம் முழுதளிக்கும்
புயநான் குடைய பெருமானைச் சந்ததம் போற்றப்பெற்றால்
மயலே அனைய விரசையைத் தாண்டுமெய் வாழ்வெய்துமே.

71

எய்து மராமரஞ் சாய்த்தடல் வாலிதன் ஈடழித்து
மொய்துணை ரார்குழற் சானகி நோவ முயன்றவனைக்
கொய்துவென் றுய்என் குறைதீர ஓர்மொழி கூறுவையோ?
நெய்துளிக் குந்தடந் தாமரைக் காடுள்ள நீலவெற்பே.

72

நீலவெற் பன்ன திருமேனி யாய்!தொண்டர் நெஞ்சகத்திற்
சாலவும் உண்மைத் தனிநா டகஞ்செயும் தாளுடையாய்!
கோலம தாகிப் புவிகொணர்ந் தாய்உனைக் கூடும்வண்ணம்
சேலன்ன கண்மட வார்மையல் நோயறச் செய்தருளே

73

அருளால் உலகங்கள் எல்லாம் படைத்தளித் தாளும்பிரான்
பொருளால் அரையர்க்(கு) இறுமாப்பு நல்குபொற் பூவைகொண்கன்
தெருளாரும் செந்தமிழ்ப் பாவல னோடன்று சென்றுவந்தோன்
இருளா ணவப்பிணித் தீர்த்தென்னை ஆளற் கிசைவதென்றே.

74

இசைபாடும் தேன்மொய்த்த பைந்துள(வு) ஆரத் திறைவனந்நாள்
வசைகூறு வானுக்கு வைகுந்தம் ஈந்த வரதன்எந்தத்
திசைதோறும் சென்ற பெருங்கீர்த்தி கொண்ட திருநெடுமால்
அசையாத குன்றெடுத் தாவினங் காத்தவன் அன்பெனக்கே

75

அன்பறி யாயெனப் பல்லோர் இகழ அகமெலிந்து
நின்பர மார்த்தம் கருதிநின் றேனென்னை நீக்கிவிடேல்
இன்ப மகோததி யாயர்மின் னார்க்களித்(து) ஏதிலர்க்குத்
துன்பமெல் லாங்கொடுத் தாய்பீலி சூடிய சுந்தரனே.

76

சுந்தரனைத் தம்பியோ டந்நாள் செகுத்துச் சுரர்வணங்கி
வந்தனை செய்யக் களிகூர்ந்த நின்றிரு மாமலர்த்தாள்
எந்தமக் கீயப் படாதுகொல் லோதொண்டன் இச்சைவழி
அந்தமி லார்க்கரும் பானைக்கு முத்தி அளித்தவனே.

77

அளியார் வகுளத் தொடைமாறன் ஆதி அளவிலன்பர்
எளியார்க் கெளியவன் என்றுனைப் பாடும் இயற்றமிழாற்
களிகூர்ந்துன் தொண்டருக் காளாகி னேனெனைக் கண்டுகொள்வாய்!
தெளிவேதும் இல்லவர்க் குந்துணை யாநின்ற செங்கண்ணனே.

78

செங்கட் கருமுகி லேயன்ன மேனித் திருநெடுமால்
வெங்கட் பணியர சாம்அணை மேற்றுயில் வீறுகொண்டோன்
திங்கட் குடையுடைச் சேயீன்ற மாதவன் செய்வதெல்லாம்
எங்கட் குவகையுண் டாகஎன் பார்முற்றும் என்னினமே.

79

என்னினைப் புள்ளும் இருப்பாய்என் றேமறை ஏத்தல்மெய்யேற்
றென்னிலத் தானைப் பிரமாவைப் பூங்கணைச் சித்தசனை
உன்னிஎன் நெஞ்ச மெலியச்செய் வாரெவர் உள்ளகத்துக்
கன்னியைத் தோழன் களவாண்டு கொள்ளவும் கண்டவனே.

80

கண்டவர் ஏச மெலிவேனை நின்னருட் காதல்கொண்ட
தொண்டரிற் கூட்டி விளையாடச் செய்து தொடுத்ததமிழ்ப்
புண்டரி கத்திருத் தாளணி யாகப் புனைந்தருளாய்!
மண்டலம் உண்டுமி ழுங்குமு தாகர வாய்த்தெய்வமே.

81

வாய்த்தநின் அன்பை வளராமற் றுன்பம் மலியவிட்டுத்
தேய்த்தல்கண் டஞ்சுகின் றேன்அரு ளாயென்ன செய்வனந்தோ
பேய்த்தடங் குன்றன்ன மாமுலைப் பாலுண்டு பெய்கழலாற்
சாய்த்தடற் றுனவ ராமரு தாவி தடிந்தவனே

82

தடியூன்று மாமறை யோனாகிச் சென்றொரு தாழ்விலன்பற்
கொடியோடு மைந்தன் உடல்கீறக் கண்டநின் கொள்கைகண்டிங்(கு)
அடியேனைச் சோதிக்க வேண்டாம் கனவிடத் தன்றுவந்த
படியேவந் தாண்டருள் கூர்கங்கை தோன்றிய பாதத்தனே.

83

பாதத்தின் கங்கையைச் சங்கரன் பூண்டதும் பண்டைமறை
நாதத்தன் நின்றிரு வுந்தியில் வாழ்வதும் நாரியரைப்
போதத் துணைக்கொண்ட போகியர் தாமும்நிற் போற்றுவதும்
சீதத் தெளிகடற் பார்சொலக் கேட்டுளந் தேறினனே.

84

தேறாத நெஞ்ச முடன்போர் புரிந்து திகைத்துநின்றேன்
ஆறும் நெறியும்நின் ஆட்டுள வேயென்(று) அறியச்செய்தாய்!
பாறாத மெய்யன்பு தந்தழி யாத பதத்தில்வைப்பாய்!
சீறுடற் பாம்பின் பணமேறி யாடும் திறக்கண்ணனே.

85

கண்ணா! நெடிய முகுந்தா!பொன் பூத்த கரியமணி
வண்ணா!என் றோதுநல் வாயுடை யாருடன் மன்னிநின்று
புண்ணாரும் நெஞ்சுடை யார்தம்மை தீங்குமெய்ப் போதம்நல்கிப்
பண்ணாரும் செந்தமிழ்ப் பாப்பகர் சீலம் பதித்தருளே.

86

பதின்மரும் தேசிகன் எம்பெரு மான்,முதற் பத்தர்களும்
விதிவழி நாடும்நின் பொற்றாட் கமலம் விரும்பிநின்று
துதிசெயும் பேறுபெற் றுத்தளர்ந் தேன்அவை சூட்டிமுழுக்
கதியளித் தின்னும் பிறவாது வாழவும் காத்தருளே.

87

காத்தளிக் கின்ற திருமால்,மெய் வீட்டிற் கலந்தவரை
நீத்தக் கடற்புவி வாழ்வான் விடுப்பது நிச்சயமென்(று)
ஏத்தவல் லார்க்கன்றி அஞ்சா(து) ஒழுகும் எனக்கிரங்காய்!
நாத்தழும் பேற நரநா ரணர்மெச்சும் நாயகனே.

88

நாயன்ன நெஞ்சகத் தாற்றுயர் கூர்ந்து நலியுமென்னை
நீயன்ன மும்புன லுங்கொடுத் தாள்வது நிச்சயமேல்
தாயன்ன பேரரு ளோடெதிர் தோன்றிநின் றுண்டருள்வாய்
வேயன்ன தோளுடைப் பூமாது மேவிய வித்தகனே.

89

வித்தகர்க் காந்தமிழ் தீயதென் றேசும் வினைத்தொடக்கர்க்(கு)
அத்தனை ஆண்மை அளித்ததென் றேவென்(று) அழுங்குமென்னைச்
சித்தசன் றானும் பொரலாகு மோபெருஞ் சீயமதாய்
அத்தரு ணத்தொரு பொல்லான் உரங்கிழித்(து) ஆர்த்தவனே

90

ஆர்த்திடும் கல்லூர லோடடைந் தேகி அணிமருதாம்
போர்த்திறற் றனவர் பொன்றிடத் தாக்கும் புனிதனுருப்
பார்த்திடற் காசைகொண் டுள்ளாரைக் கண்டு பணியறியேன்
வேர்த்திலங் கும்பிறை வானுத லார்தம்மை வெல்வதென்றே

91

வெல்லவல் லான்என்(று) உலகோர் புகழ்வது வேண்டுமெனக்(கு)
அல்லல்வெம் நோய்தவிர்த் துய்வதற் காகும் அறிவளித்(து)ஆள்
நல்லவர் ஐவர் தமைக்காத்துத் தீய நடைமுதிர்ந்த
புல்லர்பல் லோருயிர் கொன்றுவிண் ணேற்றும் புராதனனே.

92

புரந்தரன் முக்கணன் வேதன்முற் கூறும் புலவரெல்லாம்
நிரந்தரம் போற்றியும் காணுநின் றாள்களில் நேயமுற்றும்
வரந்தர வாவெனக் கூவிநின் றேனெனை வஞ்சித்திடேல்
பரந்தர வாயவெண் பாயலின் மேற்றிகழ் பைம்பொன்வெற்பே.

93

வெற்பாய நன்னிலைத் தொண்டருள் மீது விளம்புநன்னூல்
கற்பாரைச் சேர்ந்து களியாது நெஞ்சம் கலங்குகின்றேன்
பொற்பாவை கேள்வன் பதமே கதிஎன்றும் போற்றறியேன்
மற்பாவை என்செய்யு மோவுந்தி பூத்த மணிவண்ணனே.

94

வண்ணச்செவ் வாய்க்கிளி யன்னமின் னூர்தம் மயற்கடலிற்
கிண்ணக் கனதன மேநண்ணி ஏங்கிக் கிடக்குமென்னை
அண்ணத் தழுவி அடியாரிற் சேர்த்தினி(து) ஆள்வைகொல்லோ
கண்ணப் பிரானெனச் சொல்வார்க்கும் வீடருள் கார்முகிலே.

95

காரிதன் கான்முளை வைகுந்தம் எங்கும் கவின்றதென
ஊரினர் கேட்க உரைகூறச் செய்தவன் ஒள்வளைக்கை
நாரியர் ஏங்கக் கலைகவர்ந் தோனெனில் நக்கிகழார்
சீரிய மென்மலர்த் தாட்பொடி யாவுமென் சென்னியவே.

96

சென்னிகள் ஈரைந் துடையானைச் செற்றதும், சிந்தைசெய்த
கன்னிதன் மானங் குலையாது காத்ததும், காசினியோர்
பன்னிடக் கேட்டுனைப் பல்வாறு நாடிப் பரவிநின்றேன்
முன்னிலை யாவரு வாய்மயிற் பீலி முடித்தவனே.

97

முடியா விநோதத்தில் அன்பர் அவாவுற்று முற்றிடினும்
நெடியான் முடிக்கவல் லானெனப் பாரும் நிகழ்த்தல்மெய்யேற்
கொடியார் புலையும் கொலையும் தவிர்த்துனைக் கூடும்வண்ணம்
அடியார்க் கடியவ னுமெனக் கீந்தருள் ஆனந்தமே.

98

ஆனந்த வாரி அமுதே!விண் ணோருக் கருந்துணையே!
கோனந்த முற்றிற் குருந்தே!மெய் யன்பரைக் கூடிநிற்கும்
மானந் தழைக்கும் மணிவண்ண னே!என்ன வாழத்துநலந்
தானந்த முத்தி நெறியாமென் பார்மொழி சத்தியமே.

99

சத்தியும் சத்தனும் நீயெனத் தேறருந் தன்மையரும்
சித்திமுன் னுட்சில செய்தாரென் றூரவர் செப்பிடக்கேட்(டு)
எத்திசை யோரும் தினந்தேற்ற வாடுறும் என்றனது
புத்தியில் நீயில்லை யோதூணி னூடும் பொருந்தியதே

100

பொருந்திய மெய்யன் பிலர்த்தமி யேன்மனம் புண்படுமுன்
வருந்திரு மால்சொன்ன வார்த்தைமெய் யேலெம்மை வஞ்சித்திடாள்
கருந்திருப் பாவைக்கும் வெண்டிருப் பேதைக்கும் கற்பமைய்யும்
திருந்திழை யாரெவர்க் குந்தெய்வ மான திருமகளே

நூற்பயன் – வெண்பா **முற்றிற்று.**

சீராழிச் செங்கைத் திருமாலுக்(கு) அந்தாதி
பாரா யணம்புரியும் பாதவதர்க்(கு) – ஓராரும்
வெள்ளானைக் காரர் விரும்பும் பெரும்புகழும்
தள்ளாத வீடும் தரும்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

# குறிப்புரை.

காப்பு : மால் — விருப்பம்; பெய்வளையார் — கோபியர்; கரு - கருமையான மாலை - இரவைப்போன்ற நிறமுள்ள, ஆழி சக்கரம்;

1 கவுத்துவம் - திருமாலின் விருப்பமான ஆபரணம், மருமம் - மார்பு, கலை ஓர் இரண்டு - வடகலை, தென்கலை, நா-நாக்கு

2 திருமடந்தை உய்ய - இலக்குமி சிறப்படையும்படி, உம்மைத்தியானிக்கும் நான் திருமகளருளாய செல்வம் பெறாமல் உலக நிந்தையுற்றேன்

3 தொண்டு-திருமாலை வணங்கும் பாகவதர்பணி, சடகோபர்கருத்தைஒட்டியது

4 பூதாங்கும் மைந்தர் - பிரமன், மன்மதன்; பூகம் - கமுகு, தாழை - தென்னை குருகை - ஆழ்வார்திருநகரி, கோன் - சடகோபாழ்வார்.

7 கொடியோர் - துரியோதனன் ஆதியோர், வேண்டல் - விரும்பியபாகம்.

8 தானவன் - கன்றுவடிவாகவந்த அசுரன். அவனை விளாமரத்தின் மீதெறிந்து கொன்றனன் கண்ணன்

9 மாதுபங்கன்-சிவன், ஈண்டுபதவியில் உள்ள குண உருத்திரர்களைக்கொள்க.

10 நீழல்உற்றோன்-புளியமரத்தடியில்உள்ளநம்மாழ்வார். அவரைத்திருமாலாகவே கண்டு பணிபவர்கள் உயர்ந்தோரென்பதாம்.

11 எய்தரும்பேறு - குருமார்களைத் தேடியும் பெறமுடியாத கீதைப் பொருளை போர்க்களத்தில் அருச்சுனனுக்குப் போதித்த கருணைப்பொருள்.

12 ஒருசேய் - பிரகலாதன், துளவம் - துளசி.

13 குஞ்சரக் கோடு - யானைக்கோடு. கஞ்சன் - மாமனானகம்சன்

14 வம்பாயிரம்-தினமும் நூறுபிழைபொறுப்பதாக வாக்குதவப்பெற்றசிசுபாலன்

15 நானலியா - நான்நலியாதபடி (துன்பமடையாதபடி.)

16 காளியன்-கரும்பாம்பான காளிங்கன், இடராமவன்-சயித்திரதன். பார்த்தன் - அருச்சுனன். இருளாய் என்றதால் பகலில் இருளை வரச்செய்து எனக் கொள்க. தசை - ஊன், தோல், எலும்பு என்பது இனம்பற்றிக் கூறினர்.

17 சரம் தூற்றும் - அம்புகளை எவுதற்குரிய,

18 தொடக்காளன் - புலையர், ஈர்ந்து - இல்லாமற்செய்து, நட்டார் - அன்பர் நாகர் - பாம்புக்கூட்டம். புள்அரசு - கருடன்.

22 திரு - இலக்குமி. பார்மங்கை, பூமிதேவி. கம்சன் தங்கை. யசோதை. வென்றிட்ட - அருளில் உயர்ந்த.

23 வாரணம் - யானை (கசேந்திரன்)

24 பராங்குசனை - சடகோபனை. தீரஎன்றால் - தீரவேண்டுமானால்.

25 ஒருவன் - அருச்சுனன். பரி - குதிரை.

26 பரிமாமுகத்தோன் - அயக்கிரீவர் ( குருவடிவானபெருமாள் )

27 கோசிகன் - விஸ்வாமித்திரர். கோமகன் - தசரதர்மகன். இராமன்

29 சிறப்பு எழுவிளக்கும் மின்னார் - இலக்குமி ; செல்வம், வீரம், சந்தானம், புகழ், வாகனம், சுற்றம், வெற்றி, தானியம் ஆதியன.

32 விழ - விழுந்து வணங்கியபோது, வெண்டலை - கபாலம் ; வெற்பு - கயிலை மலை, தலைமைப்பரம் ஒன்றே ஒரு கடவுளைப்பற்றி உயர்வு கூறும்போது மற்றொன்றை அடக்கிக் கூறுவது மரபு. அன்றியும் சிவன் என்றவுடன் பரத்துவசிவத்தைக் கொள்ளாமல் முன் கூறியதுபோல பதவியிலுள்ள குண ருத்திரரைக் கொள்க.

34 முயல் - கறை. செயலை - திருவருளாடல்களை

35 மராஎய்த - மராமரத்தை அம்பால் எய்தருளிய

36 புத்தகக்கள்வர் - வேதங்களைக் கவர்ந்து கடலுள் மறைந்த அசுரன்

40 பாழைக்குறிக்குமவர் — அருவ நாட்டத்தினர் — பொதுவர் — யாதவர்

47 தேகமே நான்என்று கூறும் மாயாவாதம். பணம் - படம்படைத்தபாம்பு

48 குருந்துஆம் — குழந்தையாக வந்த; ஆயவன்றான் — அப்படி வேறு கடவுளில்லை. இருந்தால் அப்படியிருப்பதும் திருமால்தான் என்பதாம். இது எந்தச் சமயத்தவர்க்கும் பொதுவான கருத்து.

49 ஓதவாரி—கடல். கற்கி அவதாரமாகி கலியுக முடிவில் வரும் அவதாரத்தை வந்ததாகவே கூறியது 10வது அவதாரம்.

52 மறையவன் — பிரமன்போல (உனது மைந்தன் என்ற முறையில்)

54 பூளை — பஞ்சு.

60 குரு — சமய நெறியைப் போதிப்பவன். கடவுள்—சமயப் பொருளானவன் இவை ஒன்றாகியும் வேறாகியும் அமையும் பெருமான் திருமால்.

62 துத்திஅரா — புள்ளிகளையுடைய நாகம்.

64 மருப்பு — கொம்பு. ஒசித்தாய் — ஒடித்தாய். கொடுக்கின்றவனை. மாவலி மன்னன். தடுத்தானை—சுக்கிரனை, மடுக்கும் — உண்ணும்போது. பேய்— பாலில் விடம்பெய்துவந்த பூதகியின் உயிரைப் பாலோடு சேர உறிஞ்சிக் கொன்றது.

65 பேராத — திரும்பிப் பிறப்புக்குவாராத.

66 மாருதி — ஆஞ்சநேயர்; பெற்றம் — எருது; நெறி — செங்கோல் பசுவும் புலியும் ஒரு துறையிற்சென்று புனலருந்துவது நீதியின் முறை என்பதாம்

67 வேரி அம்தாமரை — மணமும் அழகும் உள்ள தாமரை. துணை—இரண்டு.

68 தாதோடு — தூதனை ஆஞ்சநேயருடன்

69 வெயில் — ஒளி; ஆழி — சக்கரம், விதியை — பிரமனை

70 பயவாரி — பாற்கடல் விரசை — வைகுந்தத்திற்கு இப்பக்கமுள்ள

71 முயன்றவன் — சிறைவைத்த இராவணன் தெய் — தேன்

72 கோலமதாகி — வராக உருவெடுத்துப் பூமியைக் காத்தது

73 அரையர்க்கு—அரசர்க்கு, பூவை—திருமகள். பாவலன்—செந்நாப்புலவனான திருமழிசையாழ்வார்.

74 வசைகூறுவான்—சிசுபாலன்.

75 மகோததி—கடல். ஆயர்மின்னார்—கோபியர். ஏதிலார்—பகைவர். பீலி— மயிலிறகு, சுந்தரன் - அழகன்.

76 ததியாண்டன் - கண்ணனுக்குத்தயிரும், வெண்ணெயும் நிறைய உதவியவன். அவனுக்கு முத்தி கொடுத்தபோது தயிர்ப்பானையுடன் செல்ல விழைந்தான் ஏனெனில் கண்ணனை எளிதில் காணத்துணையாயிருந்தது அந்தப்பானை என்ற காரணத்தாலாகும். அப்படியே தரப்பெற்றான் என்பதாம். கருநிறமுள்ள பானை எனவே அந்தமிலா என்றும், முடிவு (அழிவு) இல்லாத முத்தியிற் சேர்ந்த என்றும் இருபொருள் கொள்க.

77 அளிஆர்வ குளத்தொடை மாறன் - வண்டு மொய்க்கின்ற மகிழ மாலை சூடிய சடகோபன்.

78 பணிஅரசாம் அணை-பாம்பரசனுன ஆதிசேடன் படுக்கை. வீறு-வெற்றி பாம்பைக்கண்டபோதே அஞ்சுவர் — அதன்மீது படுத்துத்துயில்வது வெற்றி என்பர். திங்கட்குடைச்சேய் - சந்திரனைக் குடையாயுள்ள மன்மதனுகிய மகன்

79 உள்ளகத்து - அந்தப்புரத்திருந்த, கன்னியை-சுபத்திரையை தோழன்-அருச்சுனன். களவாண்டு கொள்ள - விரும்பி ஏற்கும்படி.

80 புண்டரிகம் - தாமரை, அணியாக - ஆபரணமாக. குமுத ஆகர - செவ்வல்லி மலர்போன்ற வாய் வடிவமான.

82 மறையோன் வடிவுடன், மயூரத்துவசனிடம் சென்று, அவன் மனைவியும் மகனுமாக, அவன் உடலைப் பாதியாக வகிர்ந்து, கிருஷ்ணப்பிரீதியாகத் தரும்படி கேட்டனர் திருமால். அவர்கள் அப்படிச் செய்தனர் என்பது வரலாறு.

83 கங்கை திருமால் பாதத்தில் தோன்றியது, சிவன் முடியிலணிந்ததும் வரலாற்று முறை. பேதவாதம் பற்றியதல்ல.

84 ஆறும்நெறி — அறுசமயம், பாறுத - கெடாத, சீறு ஆடல் — சீறி ஆடும் நாகம் பணம் — படம்

86 பதின்மர் - பத்தாழ்வார். தேசிகர் - வடகலை ஆசிரியர். எம்பெருமான் தென்கலை ஆசிரியர் மணவாளர் - என்பவர்

87 நீத்தக்கடல் - நீர்ப்பெருக்குடைய சமுத்திரம். பதமுத்தியில் உள்ள சீவன் முக்தர்களை உலக நன்மைக்காகப் பிறக்க அருள்பவன்

89 சீயமதாய் - நரசிங்க வடிவாகி பொல்லான் — இரணியன்

90 புனிதன் — கண்ணன்

91 ஐவர் — பஞ்சபாண்டவர் புல்லர் - துரியோதனுதியர்

92 புரந்தரன் - இந்திரன். பரந்து அரவாய - விசாலமான பாம்பாகிய படுக்கை

94 கண்ணபிரான் ... சொல்வார்க்கும் - கண்ணனுக அவதரித்தவன் என்று கூறுநற்கும் என்றது, எல்லாமாக விளங்கும் பரம்பொருள் என்றறியாமல், ஒரு அவதாரத்துக்கு உரியவன் என்பது பரத்துவந்தெரியாதவர் கூற்றென்றதாம்

95 காரி - காரி அரசன் கார் முகில் - சேயான சடகோபர். இகழார் — இகழாதவராது

100 கரும் திருப்பாவை - உமையவள் வெண்திருப்பேதை - கலைமகள்

பயன்: • வெள்ளாளைக்காரர் [illegible] யுடைய இந்திரர்கள்

இந் நூலாசிரியர் அருளிய நூல்களில்,
முக்கியமான நூல்களுட்சில.

தமிழலங்காரம்

படைவீட்டுப் பாமாலை

தேவகோட்டை முருகன் பிள்ளைத்தமிழ்

மனுநெறித் திருநூல்

கௌமார முறைமை

திருவரங்கத் திருவாயிரம்

பழனித் திருவாயிரம் முதலியன.

வேறு

தண்டபாணி சுவாமிகள் வரலாறு.

---

கிடைக்குமிடம்:—

தலைவர்,

கௌமார மடாலயம்,

திருவாமாத்தூர். :: விழுப்புரம் P. O

---

ராஜேஸ்வரி பிரஸ், விழுப்புரம்-65